இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 89 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 22 – வெள்ளிக்கிழமை 08 நவம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 89 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 22 - Friday 08 November 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## 2026 - ஜனவரியில் திறக்கப்படும்!

# கோவையில் தந்தை பெரியார் நூலகம் - அறிவியல் மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி – அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2024) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி சோ.மதுமதி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவை, நவ. 8-

**கோயம்புத்தூர், அனுப்பர்பாளையத்தில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, “தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நூலகம் 2026 - ஜனவரியில் திறக்கப்படும் என்று உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (06.11.2024) கோயம்புத்தூர், அனுப்பர்பாளையத்தில் நடைபெற்ற “தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டடம்” அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

கோவையில், இங்கு குழுமியிருக்கக் கூடிய மாணவ சமூதாயத்தைச் சந்திக்கின்றபோது, எனக்கு ஒரு புதிய உணர்ச்சியை, எனர்ஜியை ஏற்படுத்தியிருக்கிறது. சிறிது நாட்களுக்கு முன்பாக, கோவையில் தான் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். இன்று, நூலக அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

**கோவைக்கு மூன்று முறை வந்து நலத்திட்ட உதவிகள் வழங்கியுள்ளேன்!**

2021ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பயணித்து, நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை நான் நடத்தியிருக்கிறேன். இந்த கோவை மாவட்டத்திற்கு, மூன்று முறை நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளில் மாவட்டங்களுக்  கான பல்வேறு திட்டங்களைத் தொடங்கியும், பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தும் இருக்கிறேன்.

2023ஆம் ஆண்டு தொடக்கத்தில், அந்தத் திட்டங்கள் நிலை குறித்து, மண்டலங்கள் வாரியாக அதாவது நான்கு, ஐந்து மாவட்டங்கள் உட்படுத்தி, ஆய்வுக் கூட்டங்களை நான் நடத்தியிருக்கிறேன். இந்த ஆண்டு தொடக்கத்தில், நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தேர்தல் முடிந்த பிறகு அமைச்சரவைக் கூட்டத்தைக் நடத்தி, கடந்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் அறிவித்த அறிவிப்புகள் நிலை குறித்து, அமைச்சர்களை அவர்கள் துறை ரீதியாக ஆய்வு செய்ய சொல்லி, அறிவுறுத்திவிட்டு, நம்முடைய தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக நான் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டேன். அமெரிக்கப் பயணம் முடித்துவிட்டு வந்தவுடனே, அமைச்சர்களை சந்தித்து துறைரீதியான ஆய்வுகளை கோட்டையில் நடத்திக்கொண்டு இருக்கிறேன். இதற்கிடையில், மாவட்டங்கள் வாரியாக நான் நேரடியாக ஆய்வு செய்யலாம் என்று சொல்லி, நான் தொடங்கிய பயணத்தின் முதல் மாவட்டமாக, நான் தேர்ந்தெடுத்தது இந்த கோயம்புத்தூர் என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

**திட்டப் பணிகளை ஆய்வு செய்து மக்களின் கோரிக்கைகளைப் பெற்றேன்!**

நேற்று காலையில் இங்கு வந்ததிலிருந்து, நடந்துக்கொண்டிருக்கும் பல்வேறு பணிகளை ஆய்வு செய்திருக்கிறேன்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## கோவை மாவட்டத்திற்கு புதிய திட்டங்கள்!

★ கலைஞர் அவர்களால் சென்னையில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட இராமானுஜம் தகவல் தொழில்நுட்ப நகரத்தைப் போன்றே, கோவையில், தனியார் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து இந்த பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். சுமார் 36,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில், மூன்று மில்லியன் சதுரஅடி பரப்பளவில் அமைக்கப்பட உள்ள இந்த தகவல் தொழில்நுட்ப வளாகம், கோயம்புத்தூர் மாநகரத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு புதிய மைல்கல்லாக நிச்சயம் அமையும்.

★ அடுத்து, அவிநாசி சாலையில் கடந்த ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டு தொய்வாக நடைபெற்ற உப்பிலிபாளையம் முதல் சின்னியம்பாளையம் வரையிலான உயர்மட்ட மேம்பாலச் சாலை பணிகள் முடுக்கி விடப்படுவதுடன், உங்கள் கோரிக்கையை ஏற்று, சின்னியம்பாளையம் முதல் நீலாம்பூர் வரை மேலும் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் 600 கோடி ரூபாய் செலவில் இந்த உயர்மட்ட மேம்பாலச் சாலை நீட்டிக்கப்படும்!

★ மூன்றாவது அறிவிப்பு – தொண்டாமுத்தூர் பகுதியில் யானைகள் நடமாட்டத்தால் நிகழும் மனித – விலங்கு மோதல் சம்பவங்களைத் தடுக்கவும், பயிர்சேதங்களையும், உயிரிழப்புகளையும் தவிர்க்கவும் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு யானை புகாத நவீன பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும்.

★ நான்காவது அறிவிப்பு – கோட்டூர், வேட்டைக்காரன் புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் 38 கிராமங்களுக்கு பயனளிக்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 26 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

★ ஐந்தாவது அறிவிப்பு - பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 295 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

★ நேற்று என்னுடைய ஆய்வுப் பணிகளின்போது, என்னைச் சந்தித்த பல்வேறு தரப்புப் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, கோயம்புத்தூர் மாநகராட்சியில், பல ஆண்டுகளாக புதுப்பிக்கப்படாமல் உள்ள சாலைகள், பாதாளச் சாக்கடைப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகள், அதிக குடியிருப்புகள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள மண்சாலைகள், இவற்றையெல்லாம் தரமான தார்சாலைகளாக மேம்படுத்திட, 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

## வயநாட்டில் ஏற்பட்ட

# நிலச்சரிவுப் பேரழிவை பா.ஜ.க. அரசியலாக்குகிறது!

## வயநாடு பிரச்சாரத்தில் பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு!

*வயநாடு, நவ. 8 -*

வயநாடு நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

அப்போது மக்களிடம் வாக்குச் சேகரிக்கும் போது, வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு பேரழிவை பா.ஜ.க. அரசியலாக்குகிறது என்று குறிப்பிட்டார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளரும், வயநாடு இடைத்தேர்தலில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளருமான பிரியங்கா காந்தி நவம்பர் 5 ஆம் தேதி மாவட்டத்தில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில், தாம் வெற்றி பெற்றவுடன், வயநாட்டிலேயே தங்கி மக்கள் பணி மேற்கொள்வேன்,



நீங்கள் (வயநாடு மக்கள்) தன்னிடம் “கொஞ்சம் டெல்லிக்குப் போய் இருங்கள்” என்று கூறும் வகையில் நான் செயல்படுவேன்.

வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு பேரழிவை பா.ஜ.க. அரசியலாக்குகிறது.

உங்களுக்கு ஒரு நல்ல சுகாதார அமைப்பு, முதல் வகுப்பு மருத்துவமனை, முழு வசதிகளுடன் கூடிய மருத்துவக் கல்லூரி தேவை.

பெரிய பிரச்சினை மனித-விலங்கு மோதல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வேன் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி குறிப்பிட்டார்.

# அமெரிக்க அதிபராகிறார் டொனால்டு டிரம்ப் !

*வாஷிங்டன், நவ. 8 -*

அமெரிக்காவின் 47வது அதிபரை தேர்வு செய்வதற்கான வாக்குப் பதிவு 5.11.2024 அன்று மாலை 4.30 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கியது. நேற்று முன்தினம் (6.11.2024) விடியற்காலை 4.30 மணி வரை நடைபெற்றது.

இதில், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை அதிபர் கமலா ஹாரிசும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பும் போட்டியிட்டனர்.

கடந்த சில மாதங்களாக அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் களை கட்டின. இதில் கமலா, டிரம்ப் இருவருக்குமே ஆதரவுகள் குவிந்தன. இதனால், கமலா ஹாரிஸ், டிரம்ப் இடையே அமெரிக்க தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கான போட்டி காணப்பட்டது.

அமெரிக்காவில் அதிபரை மக்கள் நேரடியாக தேர்ந்தெடுக்க மாட்டார்கள். தங்கள் மாகாண பிரதிநிதிகளுக்கு வாக்களித்து தேர்வு செய்வதன் மூலம் அதிபர் தேர்வு செய்யப்படுவார்.

மொத்தம் 538 இடங்களும் எலக்ட்ரால் காலேஜ் ஓட்டுகள் என குறிப்பிடப்படும். இதில் 270க்கும் மேற்பட்ட ஓட்டுகளை பெறும் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

அதன்படி நேற்று காலை வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

ஆரம்ப முதலே டொனால்டு டிரம்ப் முன்னிலையில் இருந்து வந்தார். கமலா ஹாரிஸ் சற்று பின்தங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் மாலை 3.00 மணி நிலவரப்படி (இந்திய நேரம்) டிரம்ப் 267 இடங் களையும், கமலா ஹாரிஸ் 214 இடங்களையும் பெற்று இருந்தார்.

இதன்மூலம் அமெரிக்க அதிபராக டிரம்ப் தேர்வாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.